4th February 1966] [Mr. Speaker]

This again is not a matter for an adjournment motion. It is only a matter of day-to-day administration. The hon. Member can put a short-notice question to be answered by the concerned hon. Minister. So, I disallow the adjournment motion.

III.—CALLING ATTENTION TO THE CRISIS IN THE TEA INDUSTRY IN THE NILGIRIS DISTRICT DUE TO POWER-CUT.

திரு. ஜே. மாதா கவுடர் : அரசாங்கம் விதித்த மின்சார வெட்டின் காரணமாக நீலகிரி மாவட்டத்தில் தேயிலைத் தொழில் சம்பந்தமாக நிலவும் வருந்தத்தக்க நெருக்கடி நிலையும் சிறு அளவில் தேயிலை பயிரிடுவோருக்கும், தேயிலைத் தயாரிப்புத் தொழில்சாலைகளுக்கும் ஏற்பட்டுள்ள, பெருத்த நஷ்டமும் குறித்த அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த விஷயத்தைக் கனம் தொழில் அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

THE HON. SRI R. VENKATARAMAN : Mr. Speaker, Sir, I wish to make the following statement.

As the House is aware, the Government have been reluctantly obliged to impose a cut in the supply and consumption of electricity in the State with effect from the 1st November 1965, due to poor hydel storages consequent on the failure of south-west monsoon. This cut in supply has naturally constricted production capacity in various industries including the tea industry.

A 25 per cent cut is applicable to tea estates and tea factories in the State. A large number of representations were received from the industry requesting exemption from the cut. But in view of the critical power position, this request for total exemption from power cut could not be acceded to. However, the question of giving the maximum possible relief has been discussed with representatives of the industry periodically and various reliefs have been granted.

In November 1965, immediately after the imposition of the power cut, the tea factories requested additional power for November 1965. The cut on supply to tea estates and factories which had tea leaves to process and had no generators of their own was accordingly reduced to 10 per cent during November 1965, upon certain conditions. Subsequently, however, the cut during December 1965, was restored to 25 per cent. When it was represented during January 1966, that some of the estates and factories required additional power which they could consume at night from 10 p.m. to 6 a.m. the next day, it was considered that additional night supply might be given to factories that required it, provided a small quota could be fixed for the day. But estates were not enthusiastic to avail themselves of night supply keeping to a low day consumption. Estates which applied for such additional supply during January 1966, have been granted appropriate additional night supply. Requests for additional night supply required

during the current and subsequent months will be considered with the utmost possible sympathy, on receipt, consistently with the supply position.

As a result of the representation that the generators owned by some of the estates and factories were old and could not generate power to their full capacity, the Government have ordered that the rating might be finalised by the Superintending Engineer with reference to the present condition of the generators, and the supply of additional power might be made for essential operations during day subject to fixation of appropriate quota.

It will thus be seen that the Government have given the maximum possible relief to the tea industry and any further relief required will be given to the extent possible.

IV.—DISCUSSION ON THE GOVERNOR'S ADDRESS—*cont.*

* திரு. கே. ஏ. மதியழகன் : கனம் சபாநாயகர் அவர்களே, கவர்னர் பெருமான் அவர்களுடைய உரை மீது நடைபெறுகிற இந்த விவாதத்தில் நானும் கலந்து கொள்வதற்கான வாய்ப்பை அளித்ததற்காக தங்களுக்கு என் நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

(கனம் உதவி சபாநாயகர் தலைமை)

இந்த சட்டமன்றம் கூடிய நேரம், இந்திய பிரதமர் திரு. லால் பகதூர் சாஸ்திரி அவர்களை இழந்து பெரிய துக்கத்தில், பெரும் அதிர்ச்சியில் இருக்கின்ற ஒரு சூழ்நிலையில் இந்திய மக்கள் எல்லாம் துயரத்தில் இருக்கின்ற நேரமாக இருந்தது. முதலில், மறைந்த திரு. சாஸ்திரி அவர்களின் குடும்பத்தினருக்கும், இந்திய குடி மக்களும் கொண்டிருக்கும் ஆறாத் துயரில் என்னுடைய பங்கை யும் தெரிவித்துக்கொள்கிறேன். காலஞ்சென்ற சாஸ்திரி அவர்கள் மிகப் பெரிய மாமனிதரை ஒரு புகழ்பெற்ற தலைவரை இருந்து, பெரியதொரு தலைவன் என்ற பெயரைப்பெற்றுக்கொண்டு நம்மை மீளாத்துக்கத்தில் ஆழ்த்திவிட்டு காலஞ்சென்று விட்டார்கள். இந்தியத் திருநாடு பகைக்கடலில் இன்றைய தினம் கற்பாறை போல் நின்று கொண்டிருக்கிறது. இந்தக் கற்பாறையை மூழ் கடிப்பதற்கு எத்தனையோ பகை நாடுகள் எல்லாம் மோதின. அவற்றுக்கெல்லாம் சீர் குலையாமல், சின்னாபின்னமாகமல் நமது மண்ணுரிமையை பெரிதென மதித்து, மானத்தை காப்பாற்றுவதற் காக போராடிய அந்த வீர திருமகனுடைய செயல் இந்திய நாட்டில் அவரை பெருந்தலைவராக உயர்த்திவிட்டது. எளிமை யான சுபாவமும், பார்த்தாலே கருணை கொள்ளும் உள்ளமும், பொதுப்பணியில் ஈடுபடுபவர்களுக்கு எவ்வாறு பண்பாடு இருக்க வேண்டும் என்பதற்கு ஓர் உதாரணமாகவும் இருந்த சாஸ்திரி அவர்கள் மறைந்த செய்தி கேட்டு இந்திய நாட்டு குடிமக்கள் மட்டுமல்ல, உலகம் முழுவதுமே கண்ணீர் வடித்தது. சாஸ்திரி அவர்கள் கொண்டிருந்த கொள்கையில் எங்களைப்போன்ற